2020 மார்ச் 18]

முற்பகல் 10–15

அதேபோல, அந்த மூன்று பகுதிகளில்தான், கடந்த கோடைக் காலங்களில் மின் பளு அதிகமாக இருந்த காரணத்தினால், பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன. இருந்தாலும், நாங்கள் தடையில்லாமல் மின்சாரம் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால், இந்த ஆண்டு அதற்காக நாங்கள் மாதம் ஒருமுறை ஆய்வுக் கூட்டம் நடத்தினோம். அந்தப் பகுதியிலே இந்த ஆண்டு அதுபோன்ற பிரச்சினைகள் வரக் கூடாது என்பதற்காகத்தான் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. அந்தப் பகுதியிலே இந்த ஆண்டு பிரச்சினை இல்லாத அளவுக்கு நாங்கள் பார்த்துக்கொள்வோம். அதேபோல, உங்களுடையது கடற்கரைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், மேலே செல்கின்ற மின்கம்பிகளை புதைவடமாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். உங்கள் பகுதிக்கும் I.T. Corridor—அடையார், இரண்டுக்கும் சேர்த்து, 821 கிலோ மீட்டர் நீளத்திற்கு 257 கோடி ரூபாய்க்கு இப்போது டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் நடைபெறவிருக்கின்றன. அந்தப் பணிகள் 2021–2022 ஆம் ஆண்டுக்குள் முடிந்து விடும். அவை முடிந்தால், இனிமேல் அந்தப் பகுதியிலே அதுபோன்ற நிகழ்வே இருக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

118—

பாலம்

***13350—திரு. சௌ. தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதி, மீனாட்சியாபுரம் ஊராட்சியில் தேவியாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ராஜபாளையம் தொகுதி, மீனாட்சியாபுரம் ஊராட்சியில் தேவியாற்றின் குறுக்கே பாலம் அமைக்கத் தேவைப்படும் புற அணுகுசாலையை தனியார் நிலத்தின் வழியாக அமைக்க வேண்டியுள்ளதால், தற்போதைய நிலையில் பாலம் அமைக்க வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதி, மீனாட்சியாபுரம் ஊராட்சியில் தேவியாற்றின் குறுக்கே உள்ள பாலமானது மிகவும் அவசியமானது. ஏனென்றால், மீனாட்சியாபுரம், தெற்கு மீனாட்சியாபுரம், கிருஷ்ணராஜபுரம் மற்றும் வாசுதேவநல்லூர் தொகுதியைச் சார்ந்த அருவன்குளம், தென்மலை ஆகிய கிராமங்களிலிருந்து மீனாட்சியாபுரத்திற்கு பள்ளிகளில் படிக்க சுமார் 300 மாணவ மாணவியர் வந்து செல்கிறார்கள். ஆயிரக்கணக்கான பொது மக்கள், தொழிலாளர்கள் தினமும் அப்பாலத்தைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. மேலும், மழைக்காலங்களில் தேவியாற்றில் தண்ணீர் வரும்போது சுமார் 10 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தேவியாற்றின் குறுக்கே பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதி, மீனாட்சியாபுரம் ஊராட்சியிலுள்ள மக்கள்தொகை 3,694 ஆகும். மீனாட்சியாபுரம் ஊராட்சியில் தேவியாற்றின் குறுக்கே செல்லும் மீனாட்சியாபுரம்– வேதநாயகன்புரம் சாலையில் பாலம் அமைக்க சட்டமன்ற உறுப்பினர்

2020 மார்ச் 18]

கோரியுள்ளார்கள். தேவியாற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டுமெனில், புற அணுகுசாலை ஒன்றை தனியார் நிலத்தின் வழியாக அமைக்க வேண்டியுள்ளது. தற்போது, இந்த அணுகுசாலை அமைக்க தேவையான இடத்தை சம்பந்தப்பட்ட தனியாரிடமிருந்து பெற ஊராட்சி அமைப்புமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மீனாட்சியாபுரம் ஊராட்சியும் இணைந்து மேற்கூறிய நில உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, நிலத்தைப் பெற்றுத் தரும்பட்சத்தில், இப்பகுதியில் புதிய பாலம் அமைப்பதற்கான கருத்துரு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செள. தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. செள. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள நீர்காத்த ஐயனார் கோயிலுக்குச் செல்ல பொது மக்களும், பக்தர்களும் முடங்கியாற்றுப்பகுதியைக் கடந்து செல்ல வேண்டிய நிலைமையுள்ளது. மழைக்காலங்களில் கோயிலுக்குச் செல்ல முடியாது பக்தர்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கின்றனர். ஆகவே, இந்த ஐயனார் கோயிலுக்குச் செல்வதற்கு முடங்கியாற்றுப்பகுதியில் பாலம் அமைக்கவும், ராஜபாளையம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து SH41 தென்காசி route–ல் உள்ள NH 744–ல் இணைப்புச் சாலை அமைக்கவும் தமிழக முதல்வரால் கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் 12–6–2018 அன்று நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிப்பு வெளியானது. அது அறிவிப்பாக மட்டுமே உள்ளது. இன்றுவரை அதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. இந்த இணைப்புச் சாலையை அமைக்க நெடுஞ்சாலைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களையும், கிண்டியிலுள்ள தலைமைப் பொறியாளர் அவர்களையும் பல முறை நேரில் சந்தித்து மனு அளிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் அதிகமான விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த இணைப்புச் சாலை அமைக்க முதலமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2020 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதி, மீனாட்சியாபுரம் ஊராட்சியில் அமைக்கப்பட வேண்டிய பாலத்தை பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கோரினேன். அதற்கு அவர் பதில் சொல்லவில்லை. அடுத்த கேள்விக்குப் போய் விட்டார்கள். அந்த இன்னொரு கேள்வி என்னவென்றால், கோயில் சம்பந்தப்பட்ட கேள்வி. எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுடைய கோயில் சம்பந்தப்பட்டது. Finance Minister–ம் அவர்தான். கண்டிப்பாக, அவருடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். கண்டிப்பாக அது உடனடியாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்தப் பாலமும் உறுதியாக அவசியமான பாலம். நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தினீர்கள் என்றால், கண்டிப்பாகக் கட்டித் தரப்படும். நீங்கள் தனியாரிடத்தில் பேசி, அந்த இடத்தை வாங்குங்கள். அதேபோல, இன்னொரு கேள்வி முதலமைச்சர் அவர்கள் துறை சார்பாகக் கேட்டீர்கள். அதனை முதலமைச்சரிடத்தில் தனிக் கேள்வியாகக் கேட்க வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன் அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. ஆ. மகாராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தவன். நான் முதல் கேள்வியில் ஆண்டிப்பட்டியில் குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது என்ற கோரிக்கையை இந்தச் சபையின் முன் வைத்தேன். இதுநாள் வரையில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இன்றைக்கு கொரோனா நோய் மக்களை பாதித்துக் கொண்டிருக்கின்றது. பெரியாற்றில் தண்ணீரை அடைத்துவிட்டார்கள். இன்றைக்கு கூடலூரிலிருந்து வருகிற கழிவுநீரைத்தான் குடிநீராக மக்கள் குடிக்கிறார்கள். குடிப்பதற்கே

2020 மார்ச் 18]

தண்ணீர் இல்லை. எந்தத் தண்ணீரை வைத்து கையைக் கழுவுவது என்பது மக்களுடைய ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. என்னுடைய தொகுதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தலில் நின்ற தொகுதி. அம்மா அவர்கள் முதலமைச்சர் வேட்பாளராக தேர்தலில் நின்ற தொகுதி. இன்றைக்கு இந்தத் தொகுதியில் குடிதண்ணீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், எங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கையை நான் முதல் கூட்டத் தொடரிலேயே வைத்திருந்தேன். ஆனால், குடிநீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது. நான் தொகுதிக்குச் செல்லும்போது, மக்கள் என்னை கேள்வி கேட்காத அளவிற்கு இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது எங்களது கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. ஓ.பி.எஸ். அவர்களுடைய சொந்த மாவட்டம். ஆண்டிப்பட்டி தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார். அந்தத் தொகுதியின்மீது எப்போதுமே தனிக் கவனம் உண்டு. இன்றைக்கும் அது எங்கள் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய துணை முதலமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய மாவட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிகமான அளவில் திட்டங்களை மாவட்டத்திற்குச் செய்திருக்கிறார்கள். அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்லி கடமலைக்குண்டு மற்றும் ஆண்டிப்பட்டி ஒன்றியங்களுக்கு புதிய திட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம். அதேபோல ஆண்டிப்பட்டி தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்லி, அதையும் அறிவித்திருக்கிறோம். நீங்கள் கூறியபடி குடிநீர்ப் பஞ்சம் கிடையாது; பற்றாக்குறை. அன்றைக்கும் நீங்கள்

பேசும்போது இதைத்தான் நான் சொன்னேன். இந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையை வெற்றிகரமாக சமாளித்த அரசு, அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர்ப் பஞ்சம் என்று குறிப்பிட்டதை பற்றாக்குறை என்று மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 142 வருடங்களில் இல்லாத வறட்சி ஏற்பட்டது. அதற்குப் பின்னர் நீங்கள் பேசும்போது குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசினீர்கள். அப்போது பிரச்சினையே இல்லை, சமாளித்தாகிவிட்டது. அந்த நேரத்தில் சென்னைக்குக்கூட 450 MLD– தண்ணீர் தான் கொடுத்துக் கொண்டிருந்தோம். அதற்குப் பின்னர் 520 MLD தண்ணீர் கொடுக்கும்போதுதான் அந்தப் பிரச்சினை பற்றியெல்லாம் நீங்கள் பேசினீர்கள். இப்போது எல்லா மாவட்டங்களிலும் எவ்வித பிரச்சினையும் இல்லை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில்தான் மழை குறைவாக இருக்கிறது. நிலத்தடி நீர்மட்டம் உயரவில்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும், எங்களுடைய உள்ளாட்சித் துறையின் மூலமாகவும் அதற்குத் தேவையான நடவடிக்கை சிறப்பான முறையிலே எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆண்டிப்பட்டிக்கு தனியாகத் திட்டம் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றைக்கும் தேனி மாவட்டம் மற்றும் ஆண்டிப்பட்டி தொகுதிக்கு தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

119—

தூண்டில் வளைவுகள்

***5054—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—